# கள்ளக்குறிச்சி நகராட்சி

## நகர் மன்ற அவசரக் கூட்டம்

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" குறள்...

**கூட்டம் எண். 03 / 2025** **நாள். 04. 04. 2025**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற அவசரக் கூட்டம் எதிர்வரும் 07.04.2025 ஆம் தேதி திங்கள்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்ற தலைவர்
கள்ளக்குறிச்சி நகராட்சி

## கூட்டபொருள்

**பொருள் எண் : 01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—28 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.07/2024/எம்.ஏ1, நாள்.06.02.2024—ல் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு புதிய நகராட்சி அலுவலக கட்டடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.157/3ல் ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இவ்வலுவலக இதே எண்ணிடப்பட்ட ஒப்புந்தப்புள்ளி அறிவிப்பு கடித நாள்.11.03.2024—ல் அறிவிப்பு செய்யப்பட்டு மின்னனு முறையில் (E—Tender) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இறுதி செய்யப்பட்டு 16.08.2024—ல் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு புதிய நகராட்சி அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட சர்வே எண்.157/3ல் உள்ள இடத்தில் கட்டடம் அமைக்கும் பட்சத்தில் பெரும் இடநெருக்கடி ஏற்படும், மேலும் மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள நகராட்சி என்பதால் எதிர் கால வளர்ச்சியை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையிலும், இடநெருக்கடியை தவிர்க்கும் வகையில் மாற்று இடத்தில் அமைக்க வேண்டியது மிகவும் தேவையாக உள்ளது.

எனவே, புதிய நகராட்சி அலுவலக கட்டடம் எதிர் கால வளர்ச்சியை கருத்தில் கொண்டும் புதிய இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க இடம் தானமாக வழங்கிய தனியர் நிறுவனம் புதிய பேருந்து நிலையம் அருகிலே கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகம் அமைக்க ஏமப்பேர் கிராம எல்லைக்குட்பட்ட சர்வே எண்.63, 70 மற்றும் 71—ல் 1.00 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை தானமாக வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. எனவே மேற்படி நிறுவனம் தானமாக வழங்க உள்ள இடத்தில் புதிய நகராட்சி அலுவலக கட்டடம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 581 / 2022 / இ1)**

**பொருள் எண் : 02**

கள்ளக்குறிச்சி மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.ஆ7/10057/2021, நாள்.04.04.2025ல் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வீட்டுமனை ஒப்படை வழங்கும் பொருட்டு தகுதியுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனை ஒப்படைக்கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் கீழ் கண்ட அரசு புறம்போக்கு புலன்களை நத்தமாக நில வகை மாற்றம் செய்து பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தடையின்மை சான்று அனுப்புமாறு கோரியுள்ளார்.

| வ.எண். | வட்டம் | நகரம் | புல எண்/பரப்பு (ஹெக்) | வகைப்பாடு | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | ஏமப்பேர் | 126–0.38.0 | தோப்பு | 14 |
| 2 | கள்ளக்குறிச்சி | ஏமப்பேர் | 307/2–0.75.00 | பாட்டை | 06 |
| 3 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 330/2A–1.19.50 | பாதை | 05 |
| 4 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 340/2–0.42.00 | பாதை | 04 |
| 5 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 315/2–0.18.50 | பாதை | 20 |
| 6 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 54/–0.56.50 | பாதை | 03 |
| **மொத்தம்** | | | | | **52** |

மேற்கண்ட அரசு புறம்போக்கு புலங்களை நத்தமாக நிலவகை மாற்றம் செய்து பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்கிட தடையின்மை சான்று வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சியர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தடையின்மை சான்று வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.295/2025/எப்1)

**பொருள் எண் : 03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் கிராம பகுதியில் அமைய உள்ள நகராட்சி புதிய புறநகர் பேருந்து நிலையம் அருகில் புதிய நாளங்காடி மற்றும் நவீன வணிக வளாகம் கட்டடம் அமைப்பதற்கு பேருந்து நிலையத்திற்கு இடம் தானமாக வழங்கிய தனியார் நிறுவனமே சர்வே எண்.64, 65 மற்றும் 73–ல் 1.00 ஏக்கர் பரப்பளவில் இடம் தானமாக வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

மேலும், கள்ளக்குறிச்சி நகராட்சியுடன் 8 ஊராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய உள்ள பகுதிகளுக்கு மையமாக புதிய புறநகர் பேருந்து நிலையம் அமையவுள்ளது. மேலும் புதிய பேருந்து நிலையம் பகுதி அதனை சுற்றியும் உள்ள ஏராளமான கிராம பகுதியையும் உள்ளடக்கிய மையப்பகுதியாகும் உள்ளது, எனவே அப்பகுதியில் புதிய நாளங்காடி மற்றும் நவீன வணிக வணிக வளாகம் அமைத்தால் கள்ளக்குறிச்சி மாவட்ட பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் வணிகர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமையும்.

எனவே, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்தின் அருகில் தனியார் நிறுவனம் தானமாக வழங்க உள்ள சர்வே எண்.64, 65 மற்றும் 73–ல் 1.00 ஏக்கர் இடத்தில் புதிய நாளங்காடி மற்றும் நவீன வணிக வளாகம் கட்டடம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தனியார் நிறுவனம் தானமாக வழங்க உள்ள சர்வே எண்.64, 65 மற்றும் 73–ல் 1.00 ஏக்கர் இடத்தில் புதிய நாளங்காடி மற்றும் நவீன வணிக வளாகம் கட்டடம் அமைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0383 / 2025 / இ1)**

**பொருள் எண் : 04**

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2021–ல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, தற்போது அரசாணை (நிலை) எண். 57, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.02.05.2023 முதல், தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 52,507 ஆகவும், தற்போதைய தோராய மக்கள் தொகை 125000 என தெரியவருகிறது. 21 வார்டுகளை உள்ளடக்கி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும் உள்ளது. மேற்படி மக்கள் தொகைக்கு இந்நகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு 16.88 MLD ஆகும். அதில் கீழ்கண்டவாறு.

இந்நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தென்பெண்ணையாறு படுகையை நீர் ஆதாரமாக கொண்ட சுந்தரேசபுரம், ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் மணலூர்பேட்டை கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்பட்டு வருகிறது.

மேற்படி இரண்டு திட்டங்களிலிருந்து இந்நகராட்சிக்கு தினசரி 2.925 MLD குடிநீர் பெறப்பட்டு, 6 எண்ணிக்கையிலான மேல்நிலை நீத்தேக்க தொட்டிகளின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சி பகுதியில் உள்ள உள்ளூர் குடிநீர் ஆதாரத்தின் மூலமாக, சங்கராபுரம் ரோடு, க.மாமனந்தல் சாலை, ஏமப்பேர் ஏரி திறந்தவெளி கிணறுகள் மற்றும் நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 242 எண்ணிக்கையில் மினி பவர் பம்பு ஆகியவற்றின் மூலம் தினசரி 0.955 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் நீராதாரங்களின் மூலமாக மொத்தம் 3.88 மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 67 லிட்டர் என்ற வீதத்தில் இந்நகர பொதுமக்களுக்கு தினசரி வழங்கப்பட்டு வருகிறது. தேவையான குடிநீர் அளவு 16.88 MLD, தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவு 3.88 MLD இவற்றில் குறைபாடு 13.00 MLD ஆகும். எனவே, கள்ளக்குறிச்சி நகரில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் தங்குதடையின்றி வழங்க உள்ளூர் நீரதாரத்தை பெருக்க வேண்டியது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

தமிழ்நாடு அரசின் 2025–2026–ஆம் ஆண்டின் சட்டமன்ற மானிய கோரிக்கையில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே சட்டமன்ற மானிய கோரிக்கையில் அறிவித்த குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்ய தனியார் தொழில்நுட்ப கலந்தாலோசகர் நியமனம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஏதுவாக அனுமதிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி தொழில்நுட்ப கலந்தாலோசகர் நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி தனியார் தொழில்நுட்ப கலந்தாலோசகர், நியமனம் செய்யவும், அதற்கான செலவினத்தை திட்டநிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0388 / 2025 / இ1)**

நகர்மன்ற தலைவர்
கள்ளக்குறிச்சி நகராட்சி